**O.S.No. : 122/2021**

**Dated : 05.03.2025**

**பி.வா.சா.2:சுந்தர தாஸ், த/பெ:ஆண்டனி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. இந்நீதிமன்ற அழைப்பாணையில் நான் எது தொடர்பாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்றோ அல்லது என்ன ஆவணங்கள் எடுத்து வர வேண்டும் என்ற விவரங்கள் குறிப்பாக வழங்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி சுஹாசினி கூறியதன் அடிப்படையில் தான் நான் வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களை கொண்டு வந்தேன். நானும், வாதியும் ஒரே முகவரியில் தான் குடி இருக்கிறோம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.8 மற்றும் 9-ஐ பெறுவதற்கு அதில் குறிப்பிட்டுள்ள தேவாலயர்களுக்கு எழுத்து பூர்வமாக கடிதம் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாய் மொழியாக கேட்டதன் அடிப்படையில் தான் அதை வழங்கினார்கள். கிறிஸ்துவ கத்தோலிக்க முறைப்படி ஞானஸ்தானம் வழங்கும் பொழுது ஞானப் பெற்றோர் என்ற நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அந்த ஞானப்பெற்றோர் கணவன் மனைவியாக தான் இருக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.8-ல் ஞானப்பெற்றோரின் பெயரில் இன்ஷியலாக வி.ஜே. வின் முழு விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சான்றிதழிகளில் நான் போலியாக பெற்றுள்ளதால் தான் அதில் உள்ள ஞானப் பெற்றோர்களின் இன்ஷியலின் விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9-ல் சிலுவை லினி என்கின்ற ஷீபா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவரை ஷீபா என்று தான் அழைப்போம். இரண்டு சான்றிதழிகளிலும் வேறு வேறாக உள்ளதால் அனைத்து தேவாலயங்களிலும் ஒரே போல் தான் சான்றிதழ் வழங்குவார்கள் என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1 ஆம் பிரதிவாதியின் அலுவலகத்திற்கு எனது விவாகரத்து

ஆணையையும், நானும், வாதியும் ஏற்படுத்தி ஆணையுறுதி ஆவணங்களையும் அனுப்பினேன் என்றால் சரிதான். வாதி மேற்சொன்ன ஆணையுறுதி ஆவணத்தில் சுஹாசினி (எ) சினி என கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். வாதி கையொப்பம் இட்ட பெயரிற்கும் வா.சா.ஆ.8-ல் உள்ள பெயரிற்கும் வேறுபாடு உள்ளதால் வா.சா.ஆ 8 போலியானது என்றால் சரியல்ல. நான் எனது முன்னாள் மனைவி பாப்பு ஆரோக்கிய ரோசலின் மீது தாக்கல் செய்த மனு எண்.12/1987 விவாகரத்து மனுவில் 1985 ஆம் ஆண்டு முதலே விவாகரத்துக்கான ஏற்பாடுகளை செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1985-ற்கு முன்பு எனக்கும், ஆரோக்கிய ரோசலினுக்கும் உள்ள பிரச்சினை காரணமாக பிரிந்து தான் வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. 1985 வரை ஒன்றாக தான் வாழ்ந்தோம். நான் அச்சமயத்தில் பிரிந்து தான் வாழ்ந்தேன் என்றும் 1986-ல் பிறந்த 1 ஆம் பிரதிவாதியின் ஞான ஸ்தானம் நடந்தது தொடர்பாக எனக்கு எந்த விவரமும் தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. ஞான ஸ்தானம் தொடர்பான பதிவேடுகளிலிருந்து எடுத்து வழங்கப்படும் சான்றிதழிகள் ஞான ஸ்தானம் செய்தவர்கள் கேட்டால் தான் வழங்கி இருப்பார்கள் என்றும் நான் போலியாக மேற்சொன்ன வா.சா.ஆ.8 மற்றும் 9 சான்றிதழ்களை தயாரித்து எடுத்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் உண்மையான பெயரிற்கும் வா.சா.ஆ.8 மற்றும் 9-ல் உள்ள பெயரிற்கும் வேறுபாடுகள் உள்ளதால் அவைகள் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் மாண்புமிகு உதகை சார்பு நீதிமன்றத்தில் வா.சா.ஆ.1 மனு எண்.17/2002-ஐ தாக்கல் செய்யும் சமயத்தில் 1 ஆம் பிரதிவாதி இளவர் என அம்மனுவில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு சேர வேண்டிய பணத்தை நான் வங்கியில் வைப்பீடு செய்தேன். நான் 1 ஆம் பிரதிவாதியின் பெயரில் எந்த பணமும் வைப்பீடு செய்வில்லை என்றும் 1 ஆம் பிரதிவாதிக்கு நான் எந்த வித பணமும் கொடுக்கவில்லை என்றும் வா.சா.ஆ.2 ரசீதும் நானே பொய்யாக உருவாக்கியது என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு ஒத்துழைத்து பொய்யான சாட்சியங்கள் இந்நீதிமன்றத்தில் கொடுத்து

வருகிறேன் என்றும் நான் தாக்கல் செய்த ஆவணங்களும் போலியாக உருவாக்கப்பட்டவை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றும் 9-ற்கும் வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Sd./A.Mohanakrishnan,**
District Munsif,
Udhagamandalam

Uploaded by
Typist.